தினமணி

# சமையல் எண்ணெய், பழங்கள் இறக்குமதி அதிகரிப்பு

First Published : 08 Oct 2011 12:00:00 AM IST




புது தில்லி, அக்.7 : உணவுப் பணவீக்கம் இரட்டை இலக்கங்களை எட்ட உள்ள நிலையில், சமையல் எண்ணெய், பழங்கள், காய்கறிகளின் இறக்குமதி அதிகரித்துள்ளது.

நாட்டின் உணவுப் பணவீக்கம் 9.13 சதவீதத்திலிருந்து 9.41 சதவீதமாக அதிகரித்துள்ளது. நடப்பாண்டில் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலத்தில் இறக்குமதி 37.6 அதிகரித்துள்ளது. குறிப்பாக மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய், பழங்கள், காய்கறிகளின் அளவு உயர்ந்துள்ளது. 2011-12 ம் ஆண்டின் முதல் நான்கு மாதத்தில் ரூ.31,692 கோடியாக இது உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு இதே காலத்தில் இது ரூ.23,039 கோடியாக காணப்பட்டது.

சமையல் எண்ணெய் இறக்குமதிதான் அதிகளவில் உள்ளது. இது 62.9 சதவீதம் உயர்ந்து, ரூ.8,763.70 கோடியாக உள்ளது. சமையல் எண்ணெயை அதிகளவில் பயன்படுத்தும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. சமையல் எண்ணெயை அதிக அளவில் இறக்குமதி செய்வது இந்தியாதான்.

பழங்கள், காய்கறிகளின் இறக்குமதி 44.7 சதவீதம் உயர்ந்து ரூ.3,152.61 கோடியாக இருந்தது. ஏலம், கிராம்பு போன்ற வாசனை திரவியங்களின் இறக்குமதி 57.7 சதவீதம் அதிகரித்து ரூ.477.51 கோடியாக உள்ளது. பால், தேயிலை மற்றும் காபி இறக்குமதி முறையே 41.8 சதவீதம், 5.8

சதவீதம் சரிந்தது. உணவு தானியங்கள் மகசூல் சிறப்பாக உள்ளதால், அவற்றின் இறக்குமதி 92.1 சதவீதம் குறைந்துள்ளது. சிறு தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளான குடைகள், பூட்டுகள், பொம்மைகள், கண்ணாடி பொருள்களின் இறக்குமதி ( ஏப்ரல்-ஜுலை) 50.4 சதவீதம் உயர்ந்து ரூ.659.83 கோடியாக இருந்தது.

இத்தகவல்கள் அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**உணவுப் பணவீக்கம் அதிகரிப்பு**

First Published : 08 Oct 2011 12:00:00 AM IST

புதுதில்லி, அக்.7 : நாட்டின் உணவுப் பணவீக்கம் 9.13 சதவீதத்திலிருந்து 9.41 சதவீதமாக உயர்ந்துள்ளது.

காய்கறிகள், பழங்கள், பால் போன்றவற்றின் விலை உயர்வு காரணமாக உணவுப் பணவீக்கம் உயர்ந்துள்ளது. கடந்த செப்டம்பர் மாதம் 24ம் தேதியுடன் முடிடைந்த வாரத்தில் உணவுப் பணவீக்கம் 9.13 சதவீதத்திலிருந்து 9.41 சதவீதமாக அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு இதே காலத்தில் இது 16.88 சதவீதமாக இருந்தது.

இது குறித்து மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும்,ரிசர்வ் வங்கியுடன் ஆலோசனை நடத்தி வருவதாகவும் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார். உணவுப் பணவீக்கம் அதிகரித்து வருவது மிகுந்த கவலையளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தில்லியில் வெள்ளிக்கிழமை பிரணாப் முகர்ஜி செய்தியாளர்களிடம் பேசிய போது இதை தெரிவித்தார். உணவுப் பணவீக்க உயர்வை எவ்வாறு தடுப்பது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார். இது தொடர்பாக ரிசர்வ் வங்கியுடன் தொடர்ந்து பேசி வருவதாகவும் அவர் கூறினார்.

மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் வருமாறு :

காய்கறிகள் விலை 14.88 சதவீதம் உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு விலை 9.34 சதவீதமும், வெங்காயத்தின் விலை 10.58 சதவீதமும் அதிகரித்துள்ளது. பழங்களின் விலை 11.72 சதவீதமும் பால் விலை 10.35 சதவீதமும் உயர்ந்துள்ளது. முட்டை, இறைச்சி,மீன்களின் விலை 10.33 சதவீதம் உயர்வை கண்டுள்ளன.

சிறு பயறுகளின் விலை 4.57 சதவீதமும், பயறு வகைகளின் விலை 7.54 சதவீதமும் உயர்ந்துள்ளன.

பருவ மழை நாட்டின் பல பகுதிகளில் சிறப்பாக பெய்துள்ளதால், காய்கறிகள், பழங்கள், பயிறு மற்றும் தானியங்களின் விளைச்சல் அதிகரிக்கும் என்று மத்திய அரசு எதிர்பார்த்தது.

இதன் மூலம் அவற்றின் விலை குறையும் என்று நம்பிக்கையில் அது இருந்தது. ஆனால், பழங்கள், காய்கறிகளின் விலை குறைவில்லை.

"" இது குறித்து மத்திய அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும். விளைபொருள்கள் தடையின்றி கிடைக்க செய்ய வேண்டும். சேமிப்பு கிடங்குகள், குளிர்சாதன வசதி கொண்ட நெட்வொர்க் வசதிகளை அரசு ஏற்படுத்தினால், அவை தடையின்றி கிடைக்கும்" என கிரிசில் அமைப்பின் தலைமை பொருளாதார நிபுணர் டி.கே ஜோஷி தெரிவித்தார்.

உணவு அல்லாத இனங்களின் பணவீக்கம் குறைந்துள்ளது. கடந்த வாரம் 12.89 சதவீதமாக இருந்த இது வார இறுதியில் 10.77 சதவீதமாக உள்ளது. கடந்த 2010ம் ஆண்டு மார்ச் வரையில் உணவு பணவீக்கத்தை கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கியும் இதுவரை 12 முறை வட்டி விகிதங்களை மாற்றி அமைத்துள்ளது.

**பனை, தென்னை மரங்களை காக்க விழிப்புணர்வு பேரணி**

First Published : 08 Oct 2011 01:20:38 PM IST

நாகர்கோவில், அக். 7: பனை, தென்னை மரங்களைக் காக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை விழிப்புணர்வுப் பிரசாரப் பேரணி நடத்த, தமிழ்நாடு கள் இயக்கம் முடிவு செய்துள்ளதாக அதன் கள ஒருங்கிணைப்பாளர் செ. நல்லசாமி கூறினார்.

நாகர்கோவிலில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த இயக்க ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்திய அளவில் இப்போது 8 கோடி பனைமரங்கள் உள்ளன. இதில் தமிழகத்தில் மட்டும் 5 கோடி மரங்கள் உள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக பனைமரங்கள் வேகமாக வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு வெட்டப்படும் மரங்கள் செங்கல் சூளைகளுக்கும், சுண்ணாம்புக் காளவாய்களுக்கும் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தில் மட்டும் கடந்த 24 ஆண்டுகளாக கள் இறக்குவதற்கும், பருகுவதற்கும் இருக்கும் தடையே பனைமரங்கள் அழியக் காரணமாகும்.

இது குறித்து, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், தமிழகத்தில் கள்ளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்கக் கோரியும் விரைவில் விழிப்புணர்வுப் பிரசாரப் பேரணியை தமிழ்நாடு கள் இயக்கம் மேற்கொள்ள இருக்கிறது.

கன்னியாகுமரியில் தொடங்கி சென்னையில் பேரணி முடிவடையும். அங்கு முதல்வரிடம் கோரிக்கை மனு அளிக்கப்படும் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

# பருத்தி ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு வேண்டும் தொழில் துறையினர் வேண்டுகோள்

அக்டோபர் 08,2011,01:52



திருப்பூர்:"பருத்தி அறுவடை துவங்கியுள்ளதால், ஏற்றுமதிக்கு மத்திய அரசு புதிய கட்டுப்பாடு விதித்து, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய வேண்டும்' என, ஜவுளி உற்பத்தியாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.இந்தியாவில், பருத்தி ஏற்றுமதிக்கும், கொள்முதலுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்படாமல் இருந்ததால், பருத்தி வியாபாரிகள், மொத்தமாக கொள்முதல் செய்து பதுக்கினர்; உள்நாட்டிலும் செயற்கை தட்டுப்பாட்டை உருவாக்கினர்.

வெளிநாடுகளில் பருத்திக்கு தேவை அதிகரித்திருந்ததால், அதிக விலை கொடுக்க தயாராக இருந்தனர். கொள்முதல் செய்ததை விட, மூன்று மடங்கு லாபம் வைத்து ஏற்றுமதியில் ஈடுபட்டனர். இதனால், உள்நாட்டு நூற்பாலைகளும் அதிக விலை கொடுத்து பருத்தியை கொள்முதல் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன.


நூலிழை விலை அபரிமிதமாக உயர்ந்து, ஜவுளித் தொழில் பாதிக்கப்பட்டது. கடந்தாண்டில், சர்வதேச நாடுகளில் பருத்தி விளைச்சல் அதிகரித்ததால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் மந்தம் ஏற்பட்டது. இருப்பினும்,பருத்தி வியாபாரிகளின் பதுக்கல் காரணமாக, சீசன் நேரங்களில் உள்நாட்டில் பருத்தி விலை உயர்ந்தது.தற்போது பருத்தி அறுவடை, இந்தியாவில் துவங்கியுள்ளதால், பருத்தி ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும்; உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்த

பிறகு,வரும் 2012ம் ஆண்டு ஜனவரிக்கு பின்பே, பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதிக்க வேண்டும் என, தொழில் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்டவற்றின் விலையில் ஏற்றம்:உணவுப் பொருள் பணவீக்கம் 9.41 சதவீதமாக உயர்வு**

அக்டோபர் 08,2011,01:54

---




புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், செப்., 24ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 9.41 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 9.13 சதவீதமாக குறைந்து காணப்பட்டது. ஆக, உணவுப் பொருட் களின் பணவீக்கம், 0.28 சதவீதம் அதிகரித்துள்ளது. மதிப்பீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், ஆண்டின் அடிப்படையில், காய்கறிகள் விலை, 14.88 சதவீதம் என்றளவில் மிகவும் அதிகரித்துள்ளது. உருளைக் கிழங்கின் விலை, 9.34 சதவீதமும், வெங்காயத்தின் விலை 10.58 சதவீதமும் உயர்ந்துள்ளது.இது தவிர, பழங்கள் விலை, 11.72 சதவீதமும், பால் விலை, 10.35 சதவீதமும் அதிகரித்துள்ளது. மேலும், முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலையும் 10.33 சதவீதம் உயர்ந்துள்ளது.

உணவு தானியங்கள் விலை 4.57 சதவீதமும், பருப்பு வகைகள் விலை 7.54 சதவீதமும் அதிரித்துள்ளது. அதேசமயம், முக்கிய உணவுப் பொருட்களின் விலை, 10.84 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 11.43 சதவீதமாக உயர்ந்து காணப்பட்டது. மொத்த விலைக் குறியீட்டு எண் கணக்கீட்டில், முக்கிய உணவுப் பொருட்களின் பங்களிப்பு, 20 சதவீதத்திற்கும் மேல் உள்ளது.உணவு சாரா பொருட்கள் பிரிவில், நூலிழை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களின் விலை, 10.77 சதவீதமாக சரிவடைந்துள்ளது.

இது, இதற்கு முந்தைய வாரத்தில், 12.89 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது. இருப்பினும், எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றிற்கான பணவீக்கம், தொடர்ந்து, 14.69 சதவீதம் என்ற அளவிலேயே மாற்றமின்றி உள்ளது.சென்ற ஆகஸ்ட் மாதத்தில், தயாரிப்புத் துறை பொருட்கள், எரிபொருள் மற்றும் உணவு சாரா பொருட்களின் பண வீக்கத்தால், சென்ற ஆகஸ்ட் மாதத்தில் நாட்டின் பொதுப் பணவீக்கம், கடந்த 13 மாதங்களில் இல்லாத அளவிற்கு, 9.78 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது.

பண வீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், ரிசர்வ் வங்கி, கடந்த 2010ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இதுவரையிலுமாக, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை, 12 முறை உயர்த்தியுள்ளது. இது குறித்து, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகையில், "நாட்டின் பணவீக்கம் அதிகரித்துள்ளது, கவலை அளிப்பதாக உள்ளது. எனினும், இதை மிதமான அளவில் நிலை நிறுத்த, ரிசர்வ் வங்கியும், நிதி அமைச்சகமும் இணைந்து, தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும்' என்று தெரிவித்தார்.

**கொப்பரை விலை கிலோ ரூ. 12 வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2011,01:32 IST

கோபிசெட்டிபாளையம்: கொப்பரை தேங்காய் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைவதால், தென்னை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சென்ற வாரத்தை விட கிலோவுக்கு 12 ரூபாய் வீழ்ச்சி அடைந்துள்ளது. கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி, குண்டேரிப்பள்ளம் அணை பாசனம், பெரும்பள்ளம் அணை பாசனம் ஆகிய பாசனப் பகுதிகளில் தென்னை அதிகளவில் வளர்க்கப்படுகிறது. தென்னை அறுவடை செய்து, கொப்பரையாக மாற்றப்படுகிறது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சென்ற வாரம் ஒரு கிலோ கொப்பரை தேங்காய் 54 முதல் 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பு வாரம் ஒரு கிலோ 45 முதல் 48 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது. கொப்பரை விலை வீழ்ச்சியால் தென்னை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தென்னை விவசாயிகள் கூறியதாவது:
தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு அதிகளவில் தேங்காய் எண்ணெய் அனுப்பப்படுகிறது. எண்ணெய் அனுப்புவது குறைந்ததால் கொப்பரை விலை வீழ்ச்சி அடைகிறது. நடப்பு வாரத்தில் கிலோ 12 ரூபாய் குறைந்ததால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

---

## 12–வது ஐந்தாண்டு திட்டம் உணவு பதப்படுத்துதல் துறைக்கு ரூ.15,000 கோடி ஒதுக்க கோரிக்கை



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

ஆண்டு தோறும் சுமார் ரூ.44000 கோடி மதிப்புள்ள பழங்கள் மற்றும் காய்கறி போன்ற உணவுப் பொருள்கள் வீணாவதை தடுக்க கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 12–வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ.15000 கோடி நிதி ஒதுக்க வேண்டும் என உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சகம் கோரியுள்ளது. இந்த தொகை 11–வது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ.4,000 கோடியை விட சுமார் 4 மடங்கு அதிகமாகும்.

“நடப்பு 2011–12 நிதியாண்டில், மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டத்திற்காக ரூ40,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், உணவு பதப்படுத்துவதற்கு போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் வீணாகும் உணவுப் பொருள்களின் மதிப்பு இதை விட அதிகமாக உள்ளது” என இத்துறை சார்ந்த மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நிலக்கடலை சாகுபடி பரப்பளவு 16% சரிவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

இந்தியாவில், கடந்த 2010–ல் 49.77 லட்சம் ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் இது 16 சதவீதம் சரிந்து 42.86 ஹெக்டேராக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட தற்போது குறைந்த பரப்பிலேயே சாகுபடி செய்யப்பட்டுள்ளதால் உற்பத்தி குறைய வாய்ப்பு உள்ளது. எனவே, தற்போது நாட்டின் பல பகுதிகளில் நிலக்கடலை விலை குறைந்துள்ள போதிலும் மீண்டும் விலை உயர்ந்து நிலைபெறும் என்று தெரிகிறது. உற்பத்தியாகும் நிலக்கடலையில் 40 சதவீதம் எண்ணெய் உற்பத்திக்கும் மீதமுள்ளது பிற தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

ஆந்திராவில்...

நம் நாட்டில் பொதுவாக நிலக்கடலை பயிரிடும் பரப்பளவு சரிவடைந்திருந்தாலும், ஆந்திராவில் சாகுபடி பரப்பு விரிவடைந்துள்ளது. இம்மாநிலத்தில், நடப்பு பருவத்தில் 13.47 லட்சம் ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த பருவத்தில் 10.22 லட்சம் ஹெக்டேராக இருந்தது. குஜராத்தில் நடப்பு பருவத்தில் 14.34 லட்சம் ஹெக்டேரில் கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த பருவத்தில் 16.73 லட்சம் ஹெக்டேராக இருந்தது.

ஏற்றுமதி

மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா போன்ற நாடுகளில் உலர் பழவகைகளின் மீது நாட்டம் குறைந்து கடலை பண்டங்கள் மீது ஆர்வம் ஏற்பட்டு வருகிறது. இதனால் கடலை பண்டங்களின் ஏற்றுமதி கடந்த 2010–11–ல் 4.18 லட்சம் டன்னாக இருந்தது. இது, முந்தைய ஆண்டில் 3.40 லட்சம் டன் என்ற அளவிலேயே இருந்தது.

இருப்பினும், விளைச்சல் குறைந்தால், எண்ணெய் உற்பத்தி பாதிப்புக்குள்ளாகும். எனவே என்பதால் கடலை எண்ணெய் விலை வரும் பிப்ரவரி மாதம் ரூ.2,000 வரை (15 கிலோவுக்கு)


*அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 15 கிலோ எண்ணெய் தற்போது ரூ.1,665–1670 வரை உள்ளது. ஆனால் கடந்த ஆகஸ்டில் இது அதிகபட்சமாக ரூ.1,720–ஐ எட்டியிருந்தது.*

செப்.24–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில்

# உணவு பொருள் பணவீக்கம் 9.41 சதவீதமாக அதிகரித்தது

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி



பழங்கள், பால், காய்கறி வில அதிகரிப்பால், செப்டம் 24–ந் தேதியுடன் நிறை டைந்த வாரத்தில் உணவு பொருள் பண வீக்கம் 9.41 சதவீதமாக உயர்ந்தது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இப்பண வீக்கம் முந்தைய வாரத்தில் 9.13 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது 0.28 சதவீதம் உயர்ந்துள்ளது.

## பிரணாப் முகர்ஜி

உணவு பொருள் பணவீக்கம் தொடர்ந்து இரண்டு வாரங்களாக அதிகரித்து வருகிறது. இதனை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அனைத்து பொருள்களுக்கான பொது பணவீக்கமும் உயர்ந்து வருகிறது. எனவே, இம்மாதம் 25–ந் தேதி வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில், பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை மேலும் 0.25 சதவீதம் உயர்த்த வாய்ப்புள்ளது என சில பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில் ஓராண்டு கால அடிப்படையில், காய்கறி மற்றும் பருப்பு வகைகள் விலை முறையே 14.88 சதவீதம் மற்றும் 7.54 சதவீதம் உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் விலை முறையே 9.34 சதவீதம் மற்றும் 10.58 சதவீதம் உயர்ந்துள்ளது. முந்தைய வாரத்தில் இவை முறையே 14.91 சதவீதம் மற்றும் 17.04 சதவீதம் உயர்ந்து இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பழங்கள் மற்றும் பால் விலை முறையே 11.72 சதவீதம் மற்றும் 10.35 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 10.33 சதவீதம் அதிகரித்துள்ளது.

## கனிமங்கள்

எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 12.89 சதவீதத்திலிருந்து 10.77 சதவீதமாக குறைந்துள்ளது. அத்தியாவசிய பொருள் பணவீக்கம் 11.43 சதவீதத்திலிருந்து 10.84 சதவீதமாக குறைந்துள்ளது. அனைத்து பொருள்களுக்கான பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் இதன் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது. கடந்த ஆகஸ்டு மாதத்தில் பொது பணவீக்கம் கடந்த 13 மாதங்களில் இல்லாத அளவிற்கு 9.78 சதவீதமாக உயர்ந்து இருந்தது. பணவீக்கம் அதிகரித்து வருவது மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் ஒரு சவாலாக அமைந்துள்ளது.